රාජ්‍ය ගිණුම් දෙපාර්තමේන්තුව
அரச கணக்குகள் திணைக்களம்
Department of State Accounts

මගේ අංකය / எனது இல. / My No.

ඔබේ අංකය / உமது இல. / Your No.

දිනය / திகதி / Date 2017.12.29

**அரச கணக்குகள் சுற்றறிக்கை இலக்கம்:- 262/2017**

அமைச்சுக்களின் செயலாளர்கள்,
திணைக்களங்களின் தலைவர்கள்,
மாவட்டச் செயலாளர்கள்,
முப்படைகளின் தலைவர்கள் யாவருக்கும்,

**ஓய்வுபெற்ற மற்றும் மரணித்த உத்தியோகத்தர்களின் முற்பணங்கள் ''பீ'' கணக்கு நிலுவைகளைத் தீர்த்தல்.**

அரசாங்க உத்தியோகத்தர்களின் முற்பணம் ''பீ'' கணக்கு தொடர்பாக மேற்கொள்ளப்பட்ட தகவல்களைக் கோருவதன் மூலம் ஓய்வுபெற்ற மற்றும் மரணித்த உத்தியோகத்தர்களிடமிருந்து அறவிட வேண்டிய கடன்கள் பாரிய அளவில் தொடர்ந்தும் அறவிடப்படாது கணக்குகளில் காணப்படுவது என்பது அடையாளங்காணப்பட்டுள்ளது. உத்தியோகத்தர்கள் ஓய்வுபெறுகின்ற சந்தர்ப்பத்திலேயே தொடர்புடைய கடன் நிலுவைகளை தீர்ப்பதற்காக ஓய்வூதிய திணைக்களத்தினால் உத்தியோகத்தரின் ஓய்வூதிய/ மரணப் பணிக்கொடையை செலுத்தும் சந்தர்ப்பத்திலேயே ஏற்பாடுகள் விடுவிக்கப்படுகின்ற அதேவேளையில், அதுபற்றி தொடர்புடைய பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தர்களுக்கு, கணக்கீட்டு உத்தியோகத்தர்களுக்கு எழுத்து மூலமாகவோ அல்லது இணையத்தளங்களினூடாகவோ அறிவிப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. எவ்வாறாயினும், அந்த ஏற்பாடுகளைப் பயன்படுத்தி ஒவ்வொரு நிறுவனத்தினாலும் தமது நிறுவனத்தின் கணக்குக் குறிப்புகளை பதிந்ததன் பின்னர், மாதாந்தக் கணக்குச் சுருக்கத்தின் மூலம் பொதுத் திறைசேரிக்கு அறிக்கையிட்டு, தமது நிறுவனங்களின் முற்பண ''பீ'' கணக்குகளின் கீழுள்ள ஓய்வுபெற்ற மற்றும் மரணித்த உத்தியோகத்தர்களின் கடன் நிலுவைகளை தீர்த்துக் கொள்ளாமையின் காரணமாக மேற்குறிப்பிட்ட நிலைமைகள் தோன்றியுள்ளது என்பது அவதானிக்கப்பட்டுள்ளது.

02 முற்பணங்கள் ''பீ'' கணக்குகளின் கீழ் தீர்க்கப்படாதுள்ள இந்த கடன் நிலுவைகள் பற்றி அரச கணக்குகள் செயற்குழுவினது கவனத்திற்கு உள்ளாகியுள்ளபடியினால் 2018 ஜனவரி 01 ஆம் திகதி முதல் ஓய்வூதிய நன்மைகளைக் கொண்ட ஓய்வு பெறுகின்ற மற்றும் மரணித்த உத்தியோகத்தர்களின் முற்பண ''பீ'' கணக்கின் தீர்க்கப்படாதுள்ள கடன் நிலுவைகளை செலுத்துவது தொடர்பில் பின்வருமாறு நடவடிக்கைகளை மேற்கொள்ளுமாறு இதன் மூலம் அறியத்தருகிறேன்.

I. (அ) இணைய வழி (online) ஓய்வூதிய விண்ணப்பப்படிவத்தில் (PD03) மற்றும் மரணப் பணிக்கொடை விண்ணப்பப்படிவத்தில் (PD05) தொடர்புடைய நிறுவனத்தின் முற்பணங்கள் ''பீ'' கணக்கின் இலக்கம் மற்றும் தொடர்புடைய உத்தியோகத்தர்களிடமிருந்து அரசாங்க உத்தியோகத்தர்களின் முற்பணங்கள் ''பீ'' கணக்கிற்கு அறவிடவேண்டிய சகல கடன் நிலுவைகளையும் இற்றைப்படுத்தி சரியாக காட்டுதல்.

(ஆ) தொடர்புடைய உத்தியோகத்தரின் ஓய்வூதியப் பணிக்கொடையிலிருந்து அரசாங்க உத்தியோகத்தர்களின் முற்பண ''பீ'' கணக்கிற்காக அறவிடவேண்டியவை தவிர்ந்த அரசாங்கத்திற்கு அறவிட வேண்டிய ஏனைய அறவீடுகள் பற்றிய விபரம், அந்தத் தொகையை பற்று வைக்க வேண்டிய வருமானத் தலைப்புகள் அல்லது செலவுத் தலைப்புகளைக் கொண்டதாக சரியாக குறிப்பு வைத்தல்.
(இந்த தகவல்களைக் காட்டும் வசதிகள் ஓய்வூதிய விண்ணப்பப்படிவத்தில் (PD03/ PD05) வழங்கப்பட்டுள்ளது.)

II. மேலே I (அ), (ஆ) ஆகியவற்றில் குறிப்பிடப்பட்டுள்ள தகவல்களை அடிப்படையாகக் கொண்டு ஓய்வூதிய திணைக்களத்தினால் ஓர் உத்தியோகத்தர் ஓய்வூதியம் / மரணப் பணிக்கொடை செலுத்தப்படுகின்ற சந்தர்ப்பத்திலேயே கடன் நிலுவைகளைத் தீர்ப்பதற்கு

මහා භාණ්ඩාගාරය, කොළඹ 01, ශ්‍රී ලංකාව. பொது திறைசேரி, கொழும்பு 01, இலங்கை. General Treasury, Colombo 01, Sri Lanka.
General - Tel.: +94 11 2484500/600 Ext.: 1149 Fax : +94 11 2484869 Website : www.sad.gov.lk
Director General - Tel.: +94 11 2484728 Fax : +94 11 2473856 e -mail : dgsa@sad.treasury.gov.lk

உரிய குறிப்புக்களை கணக்கு வைத்து அந்தத் திணைக்களத்தின் மாதாந்த கணக்கு சுருக்கத்தின் மூலம் பொதுத் திறைசேரிக்கு அறிக்கையிடுதல்.

III. தொடர்புடைய உத்தியோகத்தரின் ஓய்வூதிய/ மரணப் பணிக்கொடை செலுத்தப்பட்டுள்ளது என்பதை ஓய்வூதியந் திணைக்களத்தினால் இணையத்தளத்திற்கு சேர்த்தல் மற்றும் அது தொடர்பாக குறிப்புக்களைச் சேர்த்து ஓய்வூதியத் திணைக்களத்தினால் மாதாந்த கணக்கு சுருக்கத்தின் மூலம் பொதுத் திறைசேரிக்கு அறிக்கையிடு, தரவுகளைக் கணக்குவைத்ததன் பின்னர் வெளியிடப்படுகின்ற திறைசேரியின் அச்சிடப்பட்ட குறிப்புக்களை (Table 67) பரிசீலனை செய்து தமது நிறுவனத்திற்கு ஓய்வூதியத் திணைக்களத்தின் மூலம் மேற்கொள்ளப்பட்டுள்ள கடன் நிலுவைகளை செலுத்துவது அனைத்தும் தமது நிறுவனத்தின் முற்பண ``பீ`` கணக்குகளின் கீழுள்ள நிருவாகக் கணக்குகள் மற்றும் தனியான நிலுவைகள் பட்டியல்களில் (CC10) சரியாக குறிப்பு வைத்து கடன் நிலுவையை உரிய விதத்தில் புத்தகங்களிலிருந்து நீக்குவதற்கு நடவடிக்கை எடுத்தல்.

03. ஓய்வுபெற்ற மற்றும் மரணித்த உத்தியோகத்தர்கள் தொடர்பாக கடன் நிலுவைகள் ஓய்வூதிய விண்ணப்பப்படிவத்தில் (PD03/PD05) சரியாக சேர்த்தல் மற்றும் திறைசேரி அச்சிடப்பட்ட குறிப்புக்களுக்கு (Table 67) அமைவாக தமது நிறுவனத்தின் கணக்குப் புத்தகங்களை இற்றைப்படுத்திக்கொள்வது சம்பந்தமாக தொடர்புடைய அமைச்சின் செயலாளர்களினால் / திணைக்களத்தின் தலைவர்களினால் / மாவட்ட செயலாளர்களினால் / முப்படைகளின் தலைவர்களினால் பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தர், கணக்கீட்டு உத்தியோகத்தர் என்ற வகையில் தனிப்பட்ட ரீதியில் பொறுப்புக்கூறக் கடமைப்பட்டுள்ளபடியினால் மேலே 01 ஆம் பந்தியில் குறிப்பிடப்பட்டுள்ள ஏற்பாடுகள் குறித்துக் கவனத்தை செலுத்தி நடவடிக்கைகளை மேற்கொள்ளுதல் வேண்டும்.

04. இந்தச் சுற்றறிக்கையின் ஏற்பாடுகளைப் பின்பற்றி 2018 ஆம் ஆண்டிலும், முன்வரும் ஆண்டுகளிலும் ஓய்வூதிய/ மரண பணிக்கொடையை வழங்கப்பட்டுள்ள உத்தியோகத்தர்களிடமிருந்து அறவிட வேண்டிய எந்தவொரு கடன் நிலுவையையும் தமது நிறுவனங்களின் முற்பணங்கள் ``பீ`` கணக்கில் சேர்க்காதிருப்பதற்கு நிறுவனத்தின் தலைவர்களினால் கவனம் செலுத்துதல் வேண்டும்.

05. மாகாண சபைகள் தொடர்பான கடன் நிலுவைகளை தீர்த்துக் கொள்வது சம்பந்தமாக இந்தச் சுற்றறிக்கையிலுள்ள ஏற்பாடுகள் ஏற்புடையதாகாத அதேவேளையில், தற்போது காணப்படுகின்ற ஏற்பாடுகளை தொடர்ந்தும் ஏற்புடையதாக்கிக் கொள்ளுதல் வேண்டும்.

06. ஓய்வூதிய மற்றும் மரணித்த உத்தியோகத்தர்களின் கடன் நிலுவைகளை தீர்ப்பது சம்பந்தமாக இந்த சுற்றறிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ள ஏற்பாடுகளின் பிரகாரம் 2018 ஜனவரி 01 ஆம் திகதி முதல் நடவடிக்கை எடுக்க வேண்டும் என்பதனை தயவுடன் அறியத்தருகிறேன்.

07. ஓய்வூதிய திணைக்களம், பொதுத் திறைசேரியின் தேசிய வரவு செலவு திட்ட திணைக்களம் மற்றும் திறைசேரி செயற்பாடுகள் திணைக்களம் ஆகியவற்றின் உடன்பாட்டின் அடிப்படையில் வெளியிடப்படுகின்ற இந்த சுற்றறிக்கையை பொதுத் திறைசேரியின் அரச கணக்குகள் திணைக்களத்தின் இணையத்தளத்தினூடாக தரவிறக்கம் (download) செய்துகொள்ளக்கூடிய வசதிகள் செய்யப்பட்டுள்ள அதேவேளையில் மேலதிக விளக்கங்கள் தேவைப்படுமாயின் தொலைபேசி இலக்கம் 011-2484735 இன் ஊடாக அரச கணக்குகள் திணைக்களத்தின் பணிப்பாளர் திரு ஏ.டி.எல்.ஜி கலன்சூரிய அவர்களுடன் தொடர்புகொளளுமாறு அறியத்தருகிறேன்.

ஒப்பம்: எஸ்.ஜீ. சேனாரத்ன
அரச கணக்குகள் பணிப்பாளர் நாயகம்

பிரதிகள்:-

1 கணக்காய்வாளர் அதிபதி, கணக்காய்வாளர் அதிபதித் திணைக்களம்.
2 பணிப்பாளர் நாயகம் திறைசேரி செயற்பாடுகள் திணைக்களம்.
3 பணிப்பாளர் நாயகம் தேசிய வரவு செலவுத் திட்ட திணைக்களம்.
4 பணிப்பாளர் நாயகம், ஓய்வூதிய திணைக்களம்.